Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,



**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 • இதழ் Issue : 033 • ஞாயிற்றுக்கிழமை Sunday • 03.05.2026 • பக்கங்கள் Pages:4 • ₹6 • ஈரோடு Erode

# வாக்கு எண்ணும் மையங்களில் ஆய்வு: ஏற்பாடுகளை பார்வையிடும் தேர்தல் அலுவலர்கள்



திருவள்ளூர்: மாவட்ட ஆட்சியர் அலுவலக பல்நோக்கு கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியரும் தேர்தல் அலுவலருமான மு.பிரதாப் தலைமையில் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில் வாக்கு எண்ணிக்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் மே 4 அன்று நடைபெறவுள்ள வாக்கு எண்ணிக்கையின் போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், சுயேட்சை வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் முதன்மை முகவர்கள் ஆகியோர் மின்னணு பொருட்களின் பயன்பாடு தடைசெய்யப்பட்டுள்ளது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

மேலும், வாக்கு எண்ணிக்கைக்குத் தேவையானமேஜைகள் மற்றும் சுற்றுகள் தொடர்பாகவும் மாவட்ட தேர்தல் அலுவலர் விளக்கம் அளித்தார். வாக்கு எண்ணிக்கைசிறப்பாக நடைபெற, அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும்எனவும்அவர் கேட்டுக் கொண்டார்.

பின்னர், செவ்வாய்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி கல்லூரி, பெருமாள்பட்டு தனியார் கல்வி நிறுவன தொழிற்பயிற்சி கல்லூரி மற்றும் கல்வி நிறுவன பள்ளி வளாகத்தில் உள்ள சீல் வைக்கப்பட்ட காப்பறையை பிரதாப் பார்வையிட்டு, பதிவேடுகளில் கையெழுத்திட்டார்.

தமிழ்நாடு சட்டப் பேரவை தேர்தல் திருவிழாவின் வாக்குப்பதிவு நாள் ஏப்ரல் 23 அன்று முடிவடைந்த நிலையில், அதன் வாக்கு எண்ணிக்கை தினமான மே 4-ஆம் தேதி மக்கள் எதிர்நோக்கி காத்திருக்கின்றனர்.

ஆளும் கட்சியான திமுக, எதிர்க்கட்சியான அதிமுக, நாம் தமிழர் கட்சி, தமிழக வெற்றிக் கழகம் என தமிழ்நாட்டில் நான்குமுனை போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், முடிவுகள் சுவாரஸ்யம் நிறைந்ததாக இருக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இது ஒருபுறம் இருக்க, வாக்குஎண்ணிக்கையை சிறப்பாக நடத்தி முடிக்க, தேர்தல் ஆணையமும் பல கட்ட ஏற்பாடுகளை செய்து வருகிறது. குறிப்பாக, அந்தந்த மாவட்டத்தில் உள்ள தேர்தல் அலுவலர்கள், அங்குள்ள தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையங்களை ஆய்வு செய்து, தலைமை தேர்தல் ஆணையத்திற்கு அறிக்கை சமர்பித்து வருகின்றனர்.

அந்த வகையில் திருவள்ளூர் மாவட்டத்தில் நடந்த இந்த கூட்டத்தில், மாவட்ட துணை தேர்தல் அலுவலர் ச.சுரேஷ், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# ‘உழைக்கும் மக்களுக்கு எதிரான தாக்குதல்’ வணிக சிலிண்டர் விலை உயர்வுக்கு இந்திய கம்யூ. கண்டனம்



சென்னை: "வணிக பயன்பாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது, உழைக்கும் மக்களுக்கு எதிரானதாக்குதலாகும்" என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த பிப்ரவரி 28-ஆம் தேதியன்று ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து எரிபொருள் போக்குவரத்தில் தடை ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டணியின் அடாவடி தாக்குதலால் மேற்காசிய நாடுகளில் ஏற்பட்ட கடுமையான பதற்ற நிலை தொடர்கிறது.

இதனால், இந்தியாவின் எரிபொருள் சந்தை வரலாறு காணாத நெருக்கடிக்கு நெட்டித் தள்ளப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களாக, இந்திய அரசுக்கு சொந்தமான எரிபொருள் எண்ணெய் நிறுவனங்கள் சமையல் எரிவாயு சிலிண்டர் விலைகளை தொடர்ந்து உயர்த்தி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக நேற்று முதல் வணிக எரிவாயு சிலிண்டர் (19 கிலோ) ஒன்றுக்கு தலா ரூ.993 உயர்த்தியுள்ளது. இதனால், வணிக எரிவாயு சிலிண்டர் விலை ரூ.3,237 ஆக உயர்ந்து, சிறு, குறு வணிகர்களின் கைகளுக்கு எட்டாப் பொருளாகிவிட்டது.

இதன் காரணமாக ஆயிரக்கணக்கான உணவகங்கள், தேநீர் உள்ளிட்ட பலகாரக் கடைகள் மூடப்பட்டுள்ளன. வணிக நிறுவனங்கள் செயலிழந்து வரும் துயரம் தீவிரமாகி வருகின்றது. இதன் விளைவாக கடுமையான விலை உயர்வுச் சுமை மக்கள் தலையில் ஏற்றப்பட்டுள்ளது.

தேநீர் தொடங்கி அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளும் 20 முதல் 50 விழுக்காடு வரை உயர்ந்துள்ளது. வீட்டு பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டர் விலையும் அதிகரித்துள்ளது. அத்துடன், சிலிண்டர் தேவைக்கு பெறுகிற நிலை தடுக்கப்பட்டு, ஊரகப் பகுதிகளில் 45 நாட்களுக்கு ஒரு முறையும், நகரப் பகுதிகளில் 25 நாட்களுக்கு ஒரு முறையும் தான் பதிவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

மக்கள் நலனை பேணுவதாக வாயில் நுரை தள்ள பேசி வரும் பிரதமர் மோடியும் அவரது அமைச்சர்களும், ஒன்றிய அரசும் அமெரிக்க அரசின் தலைவர் ட்ரம்ப் அனுமதி கேட்டு காத்துக் கிடப்பது வெட்கக்கேடானது. நாட்டின் பாரம்பரியம் மிக்க அணிசேரா அயலுறவுக் கொள்கைக்கு எதிரானது.

சமையல் எரிவாயு சிலிண்டர் விலைகளை தொடர்ந்து உயர்த்தி வரும் ஒன்றிய பாஜக அரசின் மக்கள் விரோத நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு எரிபொருள் ஏற்றுமதி செய்யும் பெருங் குழும நிறுவனங்களுக்கு ஆதரவாக கலால் வரியை குறைத்துள்ளது.

ஆனால் உள்நாட்டில் சாமானிய மக்களின் வீட்டு உபயோக, வணிக பயன்பாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் விலைகளை ஒன்றிய அரசு உயர்த்தியுள்ளது. இது உழைக்கும் மக்களுக்குஎதிரானதாக்குதலாகும். இந்த விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM


| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# மத்திய கிழக்கு நாடுகளுக்கு 8.6 பில்லியன் டாலர் ஆயுதங்களை விற்க அமெரிக்கா ஒப்புதல்

வாஷிங்டன்: இஸ்ரேல், கத்தார், குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய மத்திய கிழக்கு நாடுகளுக்கு 8.6 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ராணுவ ஆயுதங்களை விற்பனை செய்ய அமெரிக்காவின் ட்ரம்ப் நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பின் நிர்வாகம், மத்திய கிழக்கு நட்பு நாடுகளான இஸ்ரேல், கத்தார், குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்கு மொத்தம் 8.6 பில்லியன் டாலருக்கும் அதிகமான ராணுவ தடவாளங்களைவிற்பனைசெய்ய ஒப்புதல் அளித்துள்ளது. அமெரிக்க வெளியுறவுத்துறை



அமைச்சர் மார்கோ ரூபியோ வெளியிட்ட அறிவிப்பில், மத்திய கிழக்கு நட்பு நாடுகளுக்கு உடனடியாகப் பொருட்களை விற்பனை செய்ய வேண்டிய அவசரநிலை நிலவுவதை கணக்கில் கொண்டு, இந்த விற்பனைக்கான நாடாளுமன்ற ஆய்வுகளுக்கு விலக்களித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக, கத்தாருக்கு 4.01 பில்லியன் டாலர் மதிப்பிலானபேட்ரியாட்வான் மற்றும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு மற்றும் 992.4 மில்லியன் டாலர் மதிப்பிலான மேம்பட்ட துல்லியமாக அழிக்கும் ஆயுத அமைப்புகள் (APKWS) ஆகியவற்றை விற்பனை செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், குவைத்திற்கு 2.5 பில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு ஒருங்கிணைந்த கட்டளை அமைப்பு மற்றும் இஸ்ரேலுக்கு 992.4மில்லியன்டாலர் மதிப்பிலான மேம்பட்ட துல்லியமாக அழிக்கும் ஆயுத அமைப்புகள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அமெரிக்க வெளியுறவுத்துறை, ஐக்கிய அரபு அமீரகத்திற்கு 147.6 மில்லியன் டாலருக்கு APKWS அமைப்பை விற்பனை செய்யவும் ஒப்புதல் அளித்தது.

பிப்ரவரி 28 அன்று அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் மீது தாக்குதல் நடத்தின. இதற்குப் பதிலடியாக, ஈரான், இஸ்ரேல் மற்றும் அமெரிக்க ராணுவ தளங்களைக் கொண்ட வளைகுடா நாடுகள் மீது தாக்குதல்களை நடத்தியது. இதன் காரணமாக தற்போது வளைகுடா நாடுகள் அதிகளவிலான ஆயுதங்களை வாங்கத் தொடங்கியுள்ளன.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# "கருத்துக்கணிப்புகள் தொலைக்காட்சி விவாதங்களுக்கு மட்டுமே" கவுரவ் கோகோய் கடும் தாக்கு



குவாஹாட்டி: "கருத்துக் கணிப்புகள் தொலைக்காட்சி விவாதங்களுக்காக மட்டுமே பயன்படுபவை. மக்களின் உண்மையான தீர்ப்பு வாக்குகளை எண்ணும்போதுதான் வெளிப்படும்" என்று அசாம் காங்கிரஸ் தலைவர் கவுரவ் கோகோய் தெரிவித்துள்ளார்.

அசாம் சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை திங்கள் கிழமை (மே 4) நடைபெற உள்ள நிலையில், பாஜக தலைமையிலான அரசே மீண்டும் ஆட்சிக்கு வரும் என்று வெளியாகியுள்ள தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள், மாநிலம் முழுவதும் கடும் அரசியல் எதிர்வினைகளைத் தூண்டியுள்ளன.

இதுகுறித்து பேசிய அசாம் காங்கிரஸ் தலைவர் கவுரவ் கோகோய், "கருத்துக் கணிப்புகள் என்பவை முதன்மையாகத் தொலைக்காட்சி விவாதங்களுக்காக மட்டுமே பயன்படுபவை. எங்களைப் பொறுத்தவரை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலம் அசாம் மக்கள் வழங்கிய தீர்ப்பே முக்கியமானது. உண்மையான முடிவுமே 4-ஆம் தேதிதான் தெரியவரும்; நாங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளின் பாதுகாப்பு குறித்து மேற்கு வங்கத்தை போலவே அசாமிலும், எங்கள் வேட்பாளர்களிடமிருந்து ஏராளமான புகார்களைப் பெற்றுள்ளோம். இந்தப் பிரச்சினைகள் கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளன, நாங்கள் அனைத்தையும் ஆவணப்படுத்தியுள்ளோம். மேலும், இது குறித்து தொடர்ந்து கேள்வி எழுப்பி வருகிறோம்.

மாற்றத்திற்கு ஆதரவாக அசாம் ஒரு மகத்தான தீர்ப்பை வழங்கும். பாஜக இதை உணராமல் இருக்கலாம். ஆனால் இந்த முறை அசாம் மக்கள் மாற்றத்திற்காக வலுவாகவும், அமைதியாகவும் வாக்களித்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

# "சமையல் எரிவாயு விலை உயர்வை மத்திய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும்" வைகோ வலியுறுத்தல்



சென்னை: வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலை உயர்வு பொதுமக்களை கடுமையாக பாதிக்கும் என்பதால், மத்திய அரசு இந்த விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வணிக பயன்பாட்டுக்கான 19 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் கடந்த மார்ச் மாதம் ரூ.144 ரூபாயும், ஏப்ரல் மாதம் 203 ரூபாயும் உயர்த்தப்பட்டது. இந்த நிலையில், நேற்று மே 1ஆம் தேதி சிலிண்டர் விலை 993 ரூபாய் உயர்த்தப்பட்டு 3,239 ரூபாயாக விற்பனை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க - ஈரான் போரால் பன்னாட்டு சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வை காரணம் காட்டி ஒன்றிய பாஜக அரசு வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலையை ஒரேடியாக சுமார் 1000 ரூபாய் அதிகரித்து இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

கடந்த இரண்டு மாதங்களாக சமையல் எரிவாயு வினியோகம் தடைப்பட்டதால் உணவகங்கள் கடுமையாக பாதிப்பு அடைந்ததுடன், உணவுப் பொருட்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்துவிட்டது.

இந்நிலையில் வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலை உயர்வு பொதுமக்களை கடுமையாக பாதிக்கும். ஒன்றிய அரசு இந்த விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுங்கள்: தேர்தல் முடிவுகள் குறித்து பிரேமலதா கருத்து



சென்னை: ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப்பொறுங்கள் என தேர்தல் முடிவுகள் குறித்து பிரேமலதா கருத்து தெரிவித்துள்ளார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: கருத்துக்கணிப்பை நான் எப்படி பார்க்கிறேன் என்றால் ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுங்கள்; எல்லாம் முடிந்து இருக்கிறது. இன்னும் இரண்டு நாட்கள் தான் இருக்கிறது.

மே 4-ம் தேதி காலை 8 மணிக்கு ஆரம்பித்தால் மாலை 5 மணிக்குள் ரிசல்ட் தெரியப் போகிறது. அதற்கு அதீத எதிர்பார்ப்பும், கற்பனையும் தேவையில்லை. நிச்சயம் எல்லோருக்கும் நல்லதே நடக்கும்.

மதச்சார்பற்ற வெற்றிக் கூட்டணியில் போட்டி போடுகிறோம். உறுதியாக எங்களுடைய கூட்டணி அமோக வெற்றி பெறும்.

இன்னும் 2 நாட்கள் தான் இருக்கிறது. எல்லோரும் களத்தில் மிக தீவிரமாக பணியாற்றி இருக்கிறார்கள். மே 4-ல் நிச்சயமாக வெற்றி வரும். நிச்சயமாக நான் உங்களை அழைத்துப் பேசுவேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஜம்மு காஷ்மீரில் பழைய பாலம் இடிந்து விழுந்த விபத்தில் 3 பேர் உயிரிழப்பு

ஜம்மு புறநகர் பகுதியான 'தூதர்' (Thuther) பகுதியில் இருந்த பழைய பாலம் ஒன்று கடந்த



ஆண்டு ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் சேதமடைந்தது. சேதமடைந்த பாலத்தை சீர் செய்யும் நோக்கில் தடுப்புச் சுவர் மற்றும் அடித்தளம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது நேற்று மாலை பாலத்தின் ஒரு பகுதி திடீரென இடிந்து விழுந்தது. இதில், நான்கு தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த காவல்துறை, ராணுவம், தேசியப் பேரிடர் மீட்புப் படை, மாநிலப் பேரிடர் மீட்புப் படை மற்றும் தீயணைப்பு துறையினர், உடனடியாக மீட்புப் பணிகளைத் தொடங்கினர்.

இரவு முழுவதும் மின்விளக்குகளின் வெளிச்சத்தில் நடைபெற்ற 12 மணி நேரத் தேடுதல் பணி காரணமாக, முதலில் தர்செம் லால் என்ற தொழிலாளி காயத்துடன் மீட்கப்பட்டார்.

பின்னர், மூன்று தொழிலாளர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. மீட்புப் பணியின்போது பாறை விழுந்ததால் தீயணைப்புத்துறை அதிகாரி முகமது ஜாபர் காயமடைந்தார். காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவ இடத்துக்கு நள்ளிரவு வந்த துணை முதல்வர் சுரேந்தர் குமார் சௌத்ரி, மீட்புப் பணிகளை பார்வையிட்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இந்த விபத்து தொடர்பாக உதவிச் செயற்பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகியோரை பணியிடை நீக்கம் செய்ய நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், செயற்பொறியாளரை நிர்வாக ரீதியாக வேறு பணிக்கு மாற்றவும் தலைமைப் பொறியாளருக்கு நான் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன். சம்பவம் குறித்து விசாரணை நடத்த அரசு சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு ஐந்து நாட்களுக்குள் விசாரணையை நிறைவு செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளேன்" என தெரிவித்தார்.

துணை முதல்வரின் உத்தரவை அடுத்து, உதவிச் செயற்பொறியாளர் சஹில் வர்மா, இளநிலைப் பொறியாளர் சஜாத் மிர் ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பொதுப்பணித்துறையின் தொழில்நுட்பச் செயலாளரும் தலைமைப் பொறியாளருமான புருஷோத்தம் குமார் தலைமையில், மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஒரு விசாரணைக்குழு விசாரணையை தொடங்கியுள்ளதாகவும் அதிகாரிகள் கூறினர்.

# நோயாளிகளுக்கு ஜெனரிக் மருந்துகளையே பரிந்துரைக்க வேண்டும்: சுகாதார சேவைகள் இயக்ககம் அறிவுறுத்தல்



சென்னை: மத்திய அரசின் கீழ் செயல்படும் மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு ஜெனரிக் மருந்துகளை மட்டுமே பரிந்துரைக்க வேண்டும் என்று மத்திய சுகாதார சேவைகள் தலைமை இயக்ககம் அறிவுறுத்தியுள்ளது.

இந்திய மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களுக்கான நெறிசார் வழிகாட்டுதல்கள் மற்றும் விதிகளை தேசிய மருத்துவ ஆணையம் 3 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டது.

அதில் முக்கியமாக, 'ஜெனரிக் மருந்துகளை (மூலப் பெயர் கொண்ட மருந்துகள்) மட்டுமே மருத்துவர்கள் பரிந்துரைக்க வேண்டும். இந்த விதியை மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று மருத்துவ ஆணையம் தெரிவித்திருந்தது.

இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் ஆட்சேபம் எழுந்தது. 'ஜெனரிக் மருந்துகளை பரிந்துரை செய்வதில் தவறில்லை. ஆனால், அதன் தரத்தை எவ்வாறு உறுதி செய்வது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். தரமற்ற மருந்துகளால் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று இந்திய மருத்துவ சங்கம் (ஐஎம்ஏ) தெரிவித்தது.

நாடு முழுவதும் உற்பத்தியாகும் அனைத்து மருந்துகளின் தரத்தையும் உறுதிப்படுத்துவதை ஒழுங்குமுறை செய்த பிறகே, இந்த விதிகளை அமல்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இக்கோரிக்கைகளை ஏற்ற மருத்துவ ஆணையம், அந்த விதிகளை தற்காலிகமாக தள்ளிவைப்பதாக தெரிவித்தது.

இந்நிலையில், மத்திய அரசின் மருத்துவமனைகளுக்கு மத்திய சுகாதார சேவைகள் தலைமை இயக்ககம் தற்போது அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், 'கடந்த 2023 வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மத்திய அரசின் மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு ஜெனரிக் மருந்துகளை மட்டுமே பரிந்துரைக்க வேண்டும்.

இதை மருத்துவமனை நிர்வாகங்கள் கண்காணிக்க வேண்டும். அது தொடர்பான அறிக்கையை 3 மாதங்களுக்கு ஒரு முறை சமர்ப்பிக்க வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

# விமான எரிபொருள் விலை உயர்வால் ஹஜ் பயணிகள் கூடுதலாக ரூ.10,000 செலுத்த அறிவுறுத்தல்



புது டெல்லி: ஹஜ் புனித பயணம் மேற்கொள்ளும் பயணிகள், கூடுதலாக ரூ.10,00 செலுத்த ஹஜ் கமிட்டி சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. ஈரான் போர் காரணமாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஒரு பேரல் 120 அமெரிக்க டாலர் வரை ஏற்ற இறக்கத்துடன் உள்ளது. இதனால், விமான எரிபொருள் விலை அதிகரித்துள்ளது.

இதற்கிடையில், ஹஜ் பயணத்துக்கு விமானங்களை அனுப்பும் விமான நிறுவனங்கள், அடிப்படை கட்டணத்தை உயர்த்தி வழங்கும்படி ஹஜ் கமிட்டியிடம் கூறியுள்ளன. இதையடுத்து இந்தாண்டு ஹஜ் பயணம் செல்வோர், ரூ.10,000 கூடுதல் கட்டணத்தை மே 15-ம் தேதிக்குள் செலுத்தும்படி சிறுபான்மையினர் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் ஹஜ் கமிட்டி சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள அகில இந்திய மஜ்லிஸ் கட்சி தலைவர் ஒவைசி, "ஹஜ் பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு பயணியிடமும் ஹஜ் கமிட்டி ஏற்கெனவே ரூ.90,000 வசூலித்துவிட்டது. அவர்களிடம் கூடுதலாக ரூ.10,000 செலுத்தும்படி கூறுவது நியாயம் இல்லை. ஹஜ் கமிட்டி மூலம் செல்வதால், ஹஜ் பயணிகள் தண்டிக்கப்படுகிறார்களா? இது சுரண்டல், பெரும்பாலான பயணிகள் வசதியற்றவர்கள்.

அவர்கள் ஹஜ் பயணத்துக்காகப் பல ஆண்டுகளாக பணத்தை சேமிக்கின்றனர். இந்த சுற்றறிக்கை உடனடியாக திரும்பப் பெறப்பட்டு கூடுதலாக பெறப்பட்ட பணம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்" என்றார்.

இதற்கு விளக்கம் அளித்துள்ள சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜூ, "பல குடும்பங்களுக்கு ஹஜ் பயணம் வாழ்நாள் கனவு.

அந்த உணர்வை நான் மதிக்கிறேன். விமான எரிபொருள் கட்டணம் உயர்வால், ஒவ்வொரு பயணிக்கும் 300 டாலரில் இருந்து 400 டாலர் வரை விமான டிக்கெட் கட்டணத்தை உயர்த்தி வழங்கும்படி விமான நிறுவனங்கள் கேட்கின்றன. எரி பொருள் கட்டண உயர்வுக்கு, விமான நிறுவனங்களை நாம் குறை கூற முடியாது. பேச்சுவார்த்தை மூலம் ஒவ்வொரு பயணியிடமும் ரூ.10,000 (100 டாலர்) மட்டும் கூடுதல் தொகை வசூலிக்க முடிவு செய்யப்பட்டது" என்றார்.

# மிசோரமில் விடுவிக்கப்பட்ட 13 கைதிகள் மீண்டும் கைது



ஐஸ்வால்: மிசோரம் மாநிலத்தில் லுங்லே மாவட்டச் சிறை உள்ளது. இங்கு அடைக்கப்பட்டிருந்த 16 தண்டனைக் கைதிகள், போலி நீதிமன்ற ஆவணங்களைப் பயன்படுத்தி கடந்த 4 மாதங்களில் மோசடியாக விடுவிக்கப்பட்டது விசாரணைக்கு பிறகு வெளிச்சத்துக்கு வந்தது.

இதையடுத்து லுங்லே மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற அதிகாரிகள், கைதிகளை விடுவிக்க அனுமதிக்கும் நீதிமன்ற உத்தரவுகளை தேடிய போது, எந்த ஆவணமும் இல்லை.

கடந்த ஜனவரியில் தொடங்கிய இந்த மோசடி கடந்த வாரம் வரை கண்டறியப்படாமலேயே இருந்துள்ளது. இது தொடர்பாக ஏப்ரல் 25-ம் தேதி காவல் துறையிடம் புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து போலீஸார் மேற்கொண்ட தீவிர தேடுதல் வேட்டையில் இதுவரை 13 கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு கைதி இறந்துவிட்ட நிலையில் இருவர் இன்னும் தலைமறைவாக உள்ளனர்.

உண்மையான நீதிமன்ற உத்தரவுகளைப் போலவே இவர்கள் போலி விடுதலை உத்தரவுகளை பயன்படுத்தியுள்ளனர். இதற்கு ஜெர்மையா லல்தங்துரா (22) என்ற கைதி மூளையாக செயல்பட்டதாக தெரியவந்துள்ளது.

இவர் முதலில் சக கைதிகளின் நம்பிக்கையைப் பெற்றதாகவும் பிறகு சிறைக்குள் இருந்த சிலரின் உதவியை மிகத் திறமையாகப் பயன்படுத்திக்கொண்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விவகாரத்தில் மேலும் சிலர் கைது செய்யப்படலாம் என காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

# சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோயில் சித்திரை பெருவிழா திருத்தேரோட்டம் கோலாகலம்



கும்பகோணம்: கும்பகோணம் வட்டம் சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோயிலில் சித்திரை பெருவிழாவையொட்டி திருத்தேரோட்டம்நடைபெற்றது. இந்தப் பெருவிழா ஆண்டுதோறும் விமரிசையாக நடைபெறுவது வழக்கம். நிகழாண்டு இந்த விழா கடந்த ஏப்.24-ம் தேதி முதல்மே4-ம்தேதிவரை நடைபெறுகிறது. பிரதான விழாவான கொடியேற்றம் கடந்த ஏப்.24-ம் தேதி நடைபெற்றது. தொடர்ந்து விநாயகர், வள்ளி- தேவசேனா உடனாய சுப்ரமணிய சுவாமி, சண்டிகேஸ்வரர் ஆகிய சுவாமிகள் உற்சவர் மண்டபத்துக்கு எழுந்தருளினர். ஏப்.25-ம் தேதி முதல் மே 1-ம் தேதி வரை சுவாமிகள் பல்வேறு வாகனங்கள் வீதியுலாபுறப்பாடுநடைபெற்றது. (மே 2-ம் தேதி) திருத்தேரோட்டம் நடைபெற்றது. முன்னதாக காலை 7:00 மணி அளவில் சுவாமிகள் படிச்சட்டத்தில்விசாகநட்சத்திரத்தில் திருத்தேரில் எழுந்தருளினர். தொடர்ந்து காலை 8.30 மணிக்கு திருத்தேரோட்டம் நடைபெற்றது.

தேரில் வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தனர். ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு வடம்பிடித்து இழுத்துச் சென்றனர். இதில் தக்கார் சுவாமிநாதன், அறநிலையத்துறை துணை ஆணையர் உமாதேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மே 3-ம் தேதி சபாபதி பாகுலேய சுப்பிரமணியர்(நடராஜர் பெருமான்) சிவகாமி அம்பாள், மாணிக்கவாசகர் தேர்தல் பார்த்தல் திருவீதி வைபவம் ஊடல், மே 4- ம் தேதி சுவாமி யதாஸ்தானம் செல்லுதல் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை அறநிலையத்துறைஅதிகாரிகள் மற்றும் கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# ரூ.1,745 கோடி போதைப் பொருள் பறிமுதல்: மும்பையில் என்சிபி அதிகாரிகள் நடவடிக்கை



மும்பை: மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் ரூ.1,745 கோடி மதிப்பிலான கோகைன் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது. தென் அமெரிக்கா, ஆப்பிரிக்க நாடுகள் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம், துருக்கி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்து இந்தியாவுக்குப் போதைப் பொருட்கள் கடத்தப்படுவது அதிகரித்து வருகின்றன. பொதுவாக சரக்குக் கப்பல், சரக்கு விமானங்கள் மூலம்போதைப்பொருள் மும்பைக்குள் கடத்தப்படுகிறது.இந்தச் சூழலில் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள், மகாராஷ்டிர தலைநகர் மும்பையில் 349 கிலோ கோகைன் போதைப் பொருளைப் பறிமுதல் செய்துள்ளனர். இதன் சர்வதேச மதிப்பு ரூ. 1,745 கோடி. இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், "போதைப் பொருள் தடுப்பு பிரிவு (என்சிபி) அதிகாரிகள், மும்பையில் 349 கிலோ கோகைன் பறிமுதல் செய்து உள்ளனர். சிறிய அளவிலான போதைப் பொருள் கடத்தல்களைத் தொடர்ந்து கண்காணித்து மிகப்பெரிய நெட்வொர்க் கண்டறியப்பட்டு உள்ளது. சர்வதேச போதைப் பொருள் கடத்தலைக் கண்டு பிடித்த என்சிபி குழுவைப் பாராட்டுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

மும்பை நிழல் உலக தாதாவாக இருந்த தாவூத் இப்ராகிம் தற்போது பாகிஸ்தானில் தலைமறைவாக உள்ளார். அவரது நெருங்கிய கூட்டாளி சலீம் டோலா அண்மையில் துருக்கியில் கைது செய்யப்பட்டார். அவர் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டு உள்ளார். அவரது கைதைத் தொடர்ந்து மும்பையில் மிகப்பெரிய அளவில் கோகைன் கைப்பற்றப்பட்டு இருப்பதாக மகாராஷ்டிர போலீஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து என்சிபி அதிகாரிகள் கூறியதாவது: மும்பையின் பல்வேறு பகுதிகளுக்கு கோகைன் போதைப் பொருளை கடத்திச் செல்வதாக ரகசிய தகவல் கிடைத்தது.இதன்பேரில், நவி மும்பையின் கலம்போலி பகுதியில் வாகன சோதனை நடத்தப்பட்டது. நிறுத்தி சோதனை செய்தோம். அதில் இருந்து 136 மூட்டைகளில் கோகைன் கைப்பற்றப்பட்டது. இதே போல, தானே மாவட்டம் பிவண்டியில் உள்ள கிடங்கில் 213 மூட்டைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கோகைன் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்குள் கோகைன் போதைப் பொருளை மறைத்து வைத்து இந்தியாவுக்குள் கடத்தி வந்திருப்பது முதல்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த சர்வதேச போதைப் பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்பு நபர்களைதீவிரமாக தேடி வருகிறோம். இவ்வாறு கூறினர்.

# ஈரான் மீது தாக்குதலுக்கான நாடாளுமன்ற அனுமதி பெறும் 60 நாள் காலக்கெடு தற்காலிக நிறுத்தம்



வாஷிங்டன்: ஈரானுடனான போர்நிறுத்தம், போருக்கான நாடாளுமன்ற அனுமதியைப் பெறுவதற்கான 60 நாள் காலக்கெடுவை நிறுத்திவைக்கிறது என அமெரிக்க ராணுவ அமைச்சர் பீட் ஹெக்செத் விளக்கம் அளித்துள்ளார்.

ஈரான் மீது அமெரிக்காவும், இஸ்ரேலும் கடந்த பிப்ரவரி 28-ம் தேதி போர் தொடுத்தது. இது குறித்த அறிவிப்பை, அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு அதிபர் ட்ரம்ப் கடந்த மார்ச் 2-ம் தேதி தெரிவித்தார். அமெரிக்காவின் போர் அதிகார சட்டப்படி, போர் நடவடிக்கைக்கு, 60 நாட்களுக்குள் அமெரிக்க நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைக்காவிட்டால், அதன்பின் போர் நடவடிக்கையை அதிபர் திரும்ப பெற வேண்டும். இந்த 60-வது நாள் கெடு நேற்றுடன்முடிவடைந்து விட்டது.

இதனால் சட்டப்படி போரின் 60-வது நாளான மே 1-ஆம் தேதி, ஈரானுடனான போருக்கு டிரம்ப் நிர்வாகம் நாடாளுமன்றத்தின் அனுமதியைக் கோருமா என்று ஜனநாயகக்கட்சி செனட் உறுப்பினர்டிம்கெய்ன்கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த அமெரிக்க ராணுவ அமைச்சர் பீட் ஹெக்சேத், "ஈரானுடனான போர்நிறுத்தம், போருக்கான நாடாளுமன்ற அனுமதியைப் பெறுவதற்கான 60 நாள் காலக்கெடுவை நிறுத்தி வைக்கிறது" என்றார்.

இந்தகாலக்கெடு முடிவடைவது குறித்துஅமெரிக்கநாடாளுமன்றசபாநாயகர் மைக் ஜான்சனிடம் கேட்டபோது, "அமெரிக்கா போர் நிறுத்தத்தில் உள்ளது. ஈரான் மீது தீவிர தாக்குதல் நடத்தப்படவில்லை. ஈரானுடன் அமைதியை ஏற்படுத்தவே அமெரிக்கா முயன்று வருகிறது" என்றார்.



# திருச்சி அருகே தவெக தேர்தல் பணிமனைக்கு தீவைப்பு

திருச்சி:திருச்சிஅருகே பேட்டைவாய்த்தலையில் தவெக தேர்தல் பணிமனையை பெட்ரோல் ஊற்றி தீ வைத்த நபர்களை போலீஸார் தேடி வருகின்றனர். திருச்சி மாவட்டம் பேட்டைவாய்த்தலையை சேர்ந்தவர் வீர சிவா. தவெக விவசாய அணி மாவட்ட செயலாளராக உள்ளார்.

சட்டப் பேரவைத் தேர்தலையொட்டி ஸ்ரீரங்கம் தொகுதி தவெக வேட்பாளருக்காக வீட்டின் முன்பு தேர்தல் பணிமனை அமைத்திருந்தார். இந் நிலையில் நேற்று அதிகாலை இந்த தேர்தல் பணிமனை தீ வைத்து எரிக்கப்பட்டிருந்ததுடன், அங்கு வைக்கப்பட்டிருந்த தவெக விளம்பர பதாகைகளும் கிழிக்கப்பட்டிருந்தன.

இது குறித்து வீர சிவா கொடுத்த புகாரின்பேரில் பேட்டைவாய்த்தலை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர். மேலும், அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த 2 பேர், தாங்கள் கொண்டு வந்த பாட்டிலில் இருந்த பெட்ரோலை ஊற்றி தேர்தல் பணிமனைக்கு தீ வைத்தது டன், அங்கிருந்த தவெக பதாகைகளையும் கிழித்தெறிந்துவிட்டு அங்கிருந்து தப்பிச் செல்வது தெரியவந்தது.

அதனடிப்படையில் இருவரையும் போலீஸார் தேடி வருகின்றனர்.

இதைத்தொடர்ந்துஸ்ரீரங்கம் தொகுதி தவெகவேட்பாளர் ரமேஷ், தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளது: பேட்டைவாய்த்தலை பகுதியில் செயல்பட்டு வந்த எனது தேர்தல் அலுவலகம் மர்ம நபர்களால் தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது.

மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் எனக்கும், கட்சி நிர்வாகிகளுக்கும் எதிராக வன்முறை செயல்களை அரங்கேற்ற எதிர்க்கட்சிகள் திட்டமிடுவதாக தகவல்கள் கிடைத்துள்ளது. இந்த பிரச்சினையில் தேர்தல் ஆணையம் தலையிட்டு, வாக்கு எண்ணும் மையத்தில் கூடுதல் பாதுகாப்பு வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# உ.பி. நீதிபதியிடம் ரூ.24 லட்சம் மோசடி




லக்னோ: உ.பி. தலைநகர் லக்னோவில் 'அல் ஃபஹத் டூரிசம் கம்பெனி' என்ற ஒரு நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனத்தின் சார்பில் ஹஜ் யாத்திரைக்கு ஏற்பாடு செய்வதாக கூறி நீதிபதி ஒருவரிடம் ஆன்லைனில் ரூ.23.99 லட்சம் வசூலித்துமோசடிசெய்யப்பட்டது.

புகாரின் அடிப்படையில் போலீஸார் விசாரணை நடத்தி அந்த நிறுவனத்தைசேர்ந்தஉசாமா ரஷீதி, இஜாஸ் அகமது ஆகிய இருவரை கைது செய்தனர். நிறுவனத்தின் இயக்குநர் ஆமிர் ரஷீதி உள்ளிட்ட இருவரைதேடி வருகின்றனர்.

இந்த முறைகேட்டில் 4 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பணத்தை மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.

# பி.எப். ஓய்வூதியத்தை ரூ.7,500 ஆக உயர்த்த மத்திய அரசு பரிசீலனை




புதுடெல்லி: தொழிலாளர்வருங்காலவைப்புநிதி (இபிஎப்) திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை கணிசமாக உயர்த்த மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

தற்போது ரூ.1,000 குறைந்தபட்ச ஓய்வூதியமாக உள்ளது. இத்தொகை ரூ.7,500 ஆக உயர்த்தப்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. ஓய்வூதியத் தொகையை உயர்த்த நாடாளுமன்றக் குழு ஒன்றும்பரிந்துரைசெய்துள்ளது. இதுகுறித்து இறுதி முடிவு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முக்கிய மாற்றமாக, ஏடிஎம் வாயிலாக பிஎஃப் நிதியை திரும்பப் பெறும் வசதி அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் உறுப்பினர்கள் தங்கள் நிதியை இன்னும் எளிமையாகவும் விரைவாகவும் பெற முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# நூல் விலை ரூ. 7 அதிகரிப்பு நூற்பாலைகள் அறிவிப்பு



நடப்பு மாதத்தில் அனைத்து ரக நூல் விலையிலும்ரூ.7 அதிகரிக்கப்பட்டுள்ளதாக நூற்பாலைகள் அறிவித்துள்ளன. கடைசி 5 மாதங்களில் நூல் விலை ரூ.41 வரை உயர்த்துள்ளதால் ஜவுளித்துறையினர் அதிருப்தி அடைத்துள்ளனர். தரமான பஞ்சுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதே நூல் விலை உயர்வுக்கு காரணம் என நூற்பாலை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 15 நாட்களில் நூல் விலை உயர்வு ஏற்பட்டுள்ளதால் பின்னலாடை உற்பத்தியாளர்கள் புதிய ஆர்டர்களை எடுத்து செய்வதில் தயக்கம் காட்டி வருகிறார்கள். தற்போது தான் தொழில் நடக்கும் நிலையில் நூல் விலை உயர்வு மேலும் சிக்கலை ஏற்படுத்தும். அதனால் போட்டி நாடுகளுடன் போட்டி போட்டு நாம் ஆர்டர்களை எடுத்து செய்ய முடியாத நிலை ஏற்படும் என்று கூறியுள்ளனர்.

# 7 முக்கியத் துறைகளில் அந்நிய நேரடி முதலீடு: சீனத் தொடர்புடைய நிறுவனங்களுக்கு நிபந்தனையுடன் அனுமதி



புதுடெல்லி: நாட்டின் உள்நாட்டு உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், அந்நிய முதலீடுகளை ஈர்க்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் மூலம் 2025 – 26 நிதியாண்டில் மொத்த அந்நிய நேரடி முதலீடு 9 ,000 கோடி டாலரை எட்டும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தியாவுடன் நில எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள், ஒரு நிறுவனத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவான பங்குகளை வைத்திருந்தால், அதற்கு தானியங்கி முறை மூலம் அனுமதி வழங்க மத்திய அமைச்சரவை கடந்த மார்ச் 10-ம் தேதி ஒப்புதல் அளித்தது. முறையான அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது.

தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை இது குறித்த முதற்கட்ட அறிவிப்பை வெளியிட்டிருந்தாலும், அந்நியச் செலாவணி மேலாண்மைச் சட்டத்தின் கீழ் சில திருத்தங்களை மேற்கொள்வது குறித்து அமைச்சகங்களுக்கு இடையேயான ஆலோசனைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இது குறித்து டிபிஐஐடி இணைச் செயலாளர் ஜெய்பிரகாஷ்சிவஹாரே கூறுகையில், "பொருளாதார விவகாரங்கள் துறை அந்நிய முதலீடு குறித்த அறிவிப்பை ஃபெமா சட்டத்தின் கீழ் வெளியிடும். தற்போதைய சட்டங்களுடன் புதிய விதிகளை ஒருங்கிணைக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தில் உள்ளன. இது மிக விரைவில் நடைமுறைக்கு வரும்" என்றார்.

புதிய விதிகளின் மூலம் தேங்கிக் கிடக்கும் சுமார் 600 முதலீட்டு விண்ணப்பங்களுக்கு விரைவில் தீர்வு காண முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முதற்கட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ள 7 முக்கியத் துறைகளில், அரிய வகை நிரந்தர காந்தங்கள், அரிய வகை தாதுக்கள் சுத்திகரிப்பு, பாலிசிலிக்கான்-இங்காட்-வேஃபர், மேம்பட்ட பேட்டரி பாகங்கள், மின்னணு பாகங்கள் தயாரிப்பு மூலதனப் பொருட்கள் உற்பத்தி, மின்னணு மூலதனப் பொருட்கள் உற்பத்தி ஆகியவை அடங்கும். இந்தத் துறைகளில் விண்ணப்பிக்கும் தகுதியுள்ள நிறுவனங்களுக்கு 60 நாட்களுக்குள் அனுமதி வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

அதே நேரம், சீனா, ஹாங்காங், பாகிஸ்தான் அல்லது வங்கதேசம் ஆகிய நாடுகளில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு தானியங்கி முறை அனுமதி பொருந்தாது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது" என்றார்.


# காவேரிப்பாக்கம் அருகே நெல் குவியல்கள் மழையில் நனைந்து சேதம்



காவேரிப்பாக்கம் : காவேரிப்பாக்கம் அருகே நெல் குவியல்கள் மழையில் நனைந்து சேதமானது. இதனால் விவசாயிகள் நெல்லை வெயிலில் உலர்த்தி பதப்படுத்தினர். காவேரிப்பாக்கம் வட்டாரத்தில் நேற்று அதிகாலை பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சி நிலவியது. ஆனால் பெரும்பாலான விவசாயிகள் மத்தியில், திடீர் மழையால் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போது விவசாயிகள் நவரைப் பருவத்தில் அறுவடை செய்த நெல் மூட்டைகள் மற்றும் நெல் குவியல்கள், அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனைக்காக ஆங்காங்கே பாதுகாத்து வருகின்றனர். இதில் பல்வேறு விவசாயிகள் போதிய இடவசதி காரணமாக தங்கள் விவசாய நிலங்களில் பாதுகாத்து வருகின்றனர்.

இந்நிலையில் காவேரிப்பாக்கம் வட்டாரத்தில் நேற்று அதிகாலை பெய்த திடீர் மழையால் விவசாய நிலங்களில் உள்ள நெல் மூட்டைகள், ஆங்காங்கே தார்சாலையில் உள்ள நெல் குவியல்கள் என மொத்தம் சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் நேற்று காலை கூலி ஆட்கள் உதவியுடன் மழையில் நனைந்த நெல்லை, மீண்டும் வெயிலில் உலர்த்தி பதப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# கொச்சி தூத்துக்குடி இடையே இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும் திட்டத்துக்கு அனுமதி



தூத்துக்குடி: கொச்சி-தூத்துக்குடி இடையே இயற்கை எரிவாயு குழாய் அமைக்க இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தூத்துக்குடி பகுதியில் உள்ள தொழிற்சாலைகள் இயற்கை எரிவாயுக்கு மாறுவதுடன், தென் மாவட்டங்களில் வீடுகளுக்கு குழாய் மூலம் தடையின்றி இயற்கை எரிவாயு வழங்க வழிவகை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் பெரு நகரங்களில் மட்டும் வீடுகளுக்கு குழாய் மூலம் இயற்கை எரிவாயு (பிஎன்ஜி) விநியோகம் செய்யும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. இந்த திட்டத்தை நாடு முழுவதும் விரிவாக்கம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

அதற்கான பணிகளை மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக கொச்சி முதல் தூத்துக்குடி வரை கன்னியாகுமரி வழியாக இயற்கை எரிவாயு குழாய் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்த இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்துக்கு (ஐஓசிஎல்) மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியம் கடந்த சில நாட்களுக்கு முன்பு அனுமதி வழங்கியுள்ளது. கொச்சி- கன்னியாகுமரி - தூத்துக்குடி இயற்கை எரிவாயு குழாய் திட்டம் (கேடிபி-எல்) மூலம் கொச்சியில் அமைந்துள்ள திரவ இயற்கை எரிவாயு முனையத்தில் (எல்என்ஜி) இருந்து, தூத்துக்குடி வரை 425 கி.மீ. தொலைவுக்கு குழாய் அமைக்கப்படுகிறது.

இந்த திட்டம், தினமும் 6.84 மில்லியன் மெட்ரிக் ஸ்டாண்டர்டு கியூபிக் மீட்டர் (எம்எம்எஸ்சிஎம்டி) இயற்கை எரிவாயு கொண்டு வரும் திறனுடன் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தை வடிவமைத்தல், செயல்படுத்துதல், விரிவாக்கம் செய்தல் ஆகியவற்றை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மேற்கொள்ளும்.


பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு ஒழுங்குமுறை வாரியத்தின் அனுமதியை தொடர்ந்து திட்டத்துக்கான விரிவான பொறியியல் ஆய்வுகள், வழித்தட ஆய்வுகள் போன்றவை விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டத்தை வரும் 2030- ம் ஆண்டுக்குள் முடித்து பயன்பாட்டுக்கு கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அடுத்தடுத்த பணிகளின் சூழ்நிலைகளை பொறுத்து இது அமையும் என இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் சார்பில் ராமநாதபுரம் - தூத்துக்குடி இடையேயான இயற்கை எரிவாயு குழாய் திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் ராமநாதபுரத்தில் இருந்து குழாய் மூலம் இயற்கை எரிவாயு தூத்துக்குடிக்கு கொண்டுவரப்படுகிறது.

இந்த திட்டத்தின் மூலம் தூத்துக்குடி ஸ்பிக் ஆலை மற்றும் அதை சுற்றியுள்ள குடியிருப்புகளுக்கு குழாய் மூலம் இயற்கை எரிவாயு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், தூத்துக்குடி நகர் பகுதி முழுவதும் வீடுகளுக்கு குழாய் மூலம் இயற்கை எரிவாயு விநியோகம் செய்வதற்கான கட்டமைப்பு வசதிகளை இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் செய்து வருகிறது.

# மூணாறு பகுதியில் நடந்த கணக்கெடுப்பில் புதிதாக பிறந்த 100 வரையாடு குட்டிகள்



மூணாறு : மூணாறில் உள்ள இரவிகுளம் தேசிய பூங்காவில் நடந்த கணக்கெடுப்பில் புதிதாக 100 வரையாடுகள் பிறந்துள்ளது தெரியவந்துள்ளது. தென்னகத்து காஷ்மீர் என்றழைக்கப்படும் மூணாறில் சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாக விளங்குவது இரவிகுளம் தேசிய பூங்காவாகும்.

இங்கு வரையாடுகள் அதிகளவில் வசித்து வருகின்றன. தற்போது இனப்பெருக்க காலம் என்பதால் தலைமை வனவிலங்கு காப்பாளர் பிரமோத்ஜி கிருஷ்ணன் அறிவுறுத்தலின் பேரில் கடந்த ஏப்ரல் 24ம் தேதி வரையாடு கணக்கெடுப்பு பணி தொடங்கியது.

இந்த பணி ஏப்ரல் 27ம் தேதி வரை நான்கு நாட்கள் நடைபெற்றன. வனப்பகுதியைத் தொகுதிகளாகப் பிரித்து, இரு வனத்துறை அதிகாரிகள், சமூக வனவியல் பட்டதாரி மாணவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், கண்காணிப்பாளர்கள் அடங்கிய குழுவினர் ஒவ்வொரு பிரிவாக பிரிந்து ஆணை முடி, ராஜமலை, வரயாடுமேடு, மேஸ்திரிகெட்டு போன்ற வனப்பகுதிக்கிளில் கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த கணக்கெடுப்பின் மூலம் புதிதாக 100 வரையாடு குட்டிகள் பிறந்துள்ளதை அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர். மூணாறு வனவிலங்கு காப்பாளர் தலைமையில் நடைபெறும் ஆய்வு கூட்டத்திற்குப் பிறகு, வரையாடுகளின் துல்லியமான எண்ணிக்கை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும்.

கடந்த ஆண்டு ராஜமலையில் மொத்தம் 800க்கும் மேற்பட்ட வரையாடுகள் இருந்தன. அதில் 114 குட்டிகள் புதியதாகப் பிறந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

# நீட் தேர்வு மாணவர்களுக்கு மன அழுத்தத்தை போக்க உதவி எண்களை அறிவித்த தமிழ்நாடு அரசு




சென்னை: நீட் தேர்வு எழுதும் மாணவர்களின் மனஅழுத்தத்தைபோக்க உதவும் வகையில் 14416, 104 ஆகிய ஆலோசனை உதவி எண்களை தமிழ்நாடு சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

இதுகுறித்து சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 'மருத்துவ பட்டப்படிப்புகளில் சேருவதற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு வரும் மே 3-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது. இதையொட்டி மாணவர்களின் மன உறுதி மற்றும் மனநலம் காக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் "நட்புடன் உங்களோடு" திட்டம் மூலம் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, 'டெலி கவுன்சிலிங்' (Tele Counselling) தேவைப்படும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தயங்காமல் 14416 அல்லது 104 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு மனநல ஆலோசனைகளை தவறாமல் பெற்றுக் கொள்ளலாம். 24 மணி நேரமும் பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள், மருத்துவர்கள் மூலம் கட்டணமின்றி இந்தச் சேவை "வழங்கப்பட்டு வருகிறது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளநிலை மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கு விண்ணப்பம் செய்துள்ள 22,79,743 மாணவர்களில் 13,32,928 பெண் விண்ணப்பதாரர்களும், 9,46,815 ஆண் விண்ணப்பதாரர்களும் இடம்பெற்றுள்ளனர். விண்ணப்பதாரர்களில் 58% பேர் பெண்கள் என தேசிய தேர்வு முகமை தெரிவித்துள்ளது. இளநிலை நீட் நுழைவுத் தேர்வு மே 3-ம் தேதி பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரையில் நடைபெறுகிறது. 180 வினாக்கள் கேட்கப்பட்டு, 720 மதிப்பெண்கள் கொள்குறி வகையிலான தேர்வு தமிழ் உட்பட 13 மொழிகளில் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு தலைநகர் சென்னை மாவட்டத்தில் 43 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில் 22,195 மாணவர்கள் தேர்வை எழுதவுள்ளனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாணவர்களுக்கான அட்மிட் கார்டு ஏப்ரல் 26-ம் தேதி வெளியானது. மாணவர்கள் அட்மிட் கார்டு, அடையாள அட்டை, புகைப்படங்கள் உள்ளிட்ட ஆவணங்களை தேர்வு மையத்திற்கு கொண்டு செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மாணவர்கள் நீட் தேர்வு தொடர்பான சந்தேகங்களுக்கு அல்லது தகவல்களுக்கு 011-40759000/011-69227700 என்ற எண்கள் அல்லது neetug2026@nta.ac.in இமெயில் முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.

# Two FIRs against Sandeep Pathak in Punjab, BJP calls it 'vendetta politics': What we know



*Sandeep Pathak was seen leaving his Delhi residence. When approached for a response, the Rajya Sabha MP did not engage and left in his car.*

*Pathak was among the seven Rajya Sabha MPs who recently left the AAP and merged with the BJP. The others include Raghav Chadha, Swati Maliwal, Rajinder Gupta, Vikramjit Sahney, Harbhajan Singh and Ashok Mittal.*

*Except for Maliwal, all are MPs from Punjab. Their collective exit significantly reduced AAP's Rajya Sabha strength from 10 to three, delivering a major setback to the party ahead of the Punjab elections.*

*What we know so far*

*While the exact reason behind the cases is not yet clear, government sources told HT that the FIRs have been filed under non-bailable sections.*

*"Punjab Police is making efforts to arrest the accused as FIRs have been registered under non-bailable sections," HT earlier reported citing government sources.*

*Amid reports surfacing on Saturday, Pathak was seen leaving his Delhi residence. When approached for a response, the Rajya Sabha MP did not engage and left in his car.*

*There has been no official confirmation from Punjab Police so far regarding the FIRs.*

*When asked about the development, Sandeep Pathak told news agency ANI: "I have no idea of any FIR against me."*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.